மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஹேஷ்யத்திற்கெல்லாம் வேண்டாம். உங்களுக்கு அது உருவாக்கப்படுமா என்று கேட்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். நேரம் இல்லை.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலையை தலைநகரமாகக் கொண்டு மாவட்டம் உருவாக்கப்படுமா அல்லது பொள்ளாச்சியை தலைநகரமாகக் கொண்டு மாவட்டம் உருவாக்கப்படுமா என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எங்கே மாவட்டத்தைப் பிரிக்கிறோம் என்று சொன்னோம். சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர் பெருமக்களும் இதுபோல கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அரசினுடைய கவனத்தில் இருக்கிறது என்றுதான் சொன்னோம்; பரிசீலிக்கப்படுகிறது என்று சொல்லவில்லை. அவரவர்கள் அவரவர்களுடைய சௌகரியத்திற்கு பத்திரிகையிலோ, YouTube—லோ பிரிப்போம் என தெரிவிக்கின்றனர். அப்படி நடக்காது. அப்படிப் பிரிக்க வேண்டிய காலம் வருகின்ற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்தையெல்லாம் கேட்காமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுக்க மாட்டார்கள். அப்படிப் பிரிக்க நேரும் காலங்களில் நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து அந்தக் கோரிக்கையை வைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

105—

சிறப்பு நீதிமன்றம்

***152—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலியல் குற்ற வழக்குகளை விரைவாக விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, சட்டத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பாலியல் குற்ற வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக, தனி நீதிமன்றங்களைத் தமிழ்நாடு அரசு, உயர் நீதிமன்றத்தினுடைய அறிவுறுத்தலின்படி ஏற்கெனவே அமைத்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்ற வழக்குகளுக்கான விசாரணை மிகக் காலதாமதமாக நடைபெறுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பாலியல் குற்றங்களை விசாரிப்பதற்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள்; மகிழ்ச்சி. அனைத்து மாவட்டங்களிலும் இந்தச் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? மகளிர் நீதிமன்றம் அல்லாத சிறப்பு நீதிமன்றமாக இது செயல்படுகிறதா? தற்போது மகளிர் நீதிமன்றங்களில்தான் இந்த வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. அதைப்போல பல மகளிர் நீதிமன்றங்களிலே நீதிபதிகள், நீதிமன்ற ஊழியர்கள் காலிப் பணியிடங்கள் இருக்கக்கூடிய ஒரு சூழல் இருக்கின்றது. இவற்றையெல்லாம் நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று வினவ விரும்புகிறேன்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென 32 மகளிர் நீதிமன்றங்கள் மாவட்ட நீதிபதி தரத்திலும், 33 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் குற்றவியல் நடுவர் தரத்திலும் தோற்றுவிக்கப்பட்டு, அவற்றில் 4 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் தவிர, மற்ற அனைத்து நீதிமன்றங்களும் இன்றைக்கு இயங்கி*

வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதித் துறையைப் பொறுத்தவரைக்கும், எல்லா இடங்களிலுமே நடுவர்கள் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீதிபதிகள் இருக்கிறார்கள். காலிப் பணியிடங்கள் இருந்தால் நிச்சயமாக அவற்றைப் பூர்த்தி செய்ய உயர் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், POCSO சட்டத்தின்கீழே வருகின்றன. உச்ச நீதிமன்றம் POCSO சட்டத்தின்கீழே குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்ற வழக்குகளில் 6 மாதங்களில் விசாரணை முடிக்கப்பட வேண்டும். அடுத்த 6 மாதங்களில் மேல்முறையீடு முடிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றது. ஆனால், தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களில் மட்டும்தான் POCSO தொடர்பான, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வழக்குகளை விசாரிக்கக்கூடிய நீதிமன்றங்கள் இருக்கின்றன என்று தெரிய வருகிறது. மேலும், இந்த வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டிக்கப்படக்கூடிய விகிதம் மிகக் குறைவாக, வெறும் 14 விழுக்காடுதான் இருக்கின்றது என்று ஒரு புள்ளிவிவரத்தின் அடிப்படையிலே தெரிய வருகின்றது. இந்த வழக்குகளும் மிகவும் காலதாமதமாக நடைபெற்று வருகின்றன. உச்ச நீதிமன்றம் 6 மாதங்களில் முடிக்க வேண்டும் என்று சொன்னது 2012–ல். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், 2014 முதல் தேனியில் நடைபெற்ற ஒரு சிறுமி தொடர்பான பாலியல் வழக்கில் 2018–ல் 3 பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டு, அடுத்த மாதமே அவர்கள் விடுதலை பெற்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் வினவ விரும்புவது, காலதாமதமான தரமற்ற விசாரணையால் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க முடியாமல் குற்றவாளிகளை விடுதலை செய்யக்கூடிய இந்த நிலையை மாற்றுவதற்கு தரமான விசாரணையை நடத்துவதற்கு உரிய பயிற்சிகளை அரசுத் தரப்பு வழக்கறிஞர்களுக்கும், சட்ட அலுவலர்களுக்கும் அளித்து, அனைத்து மாவட்டங்களிலும் POCSO நீதிமன்றங்களை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், 16 நீதிமன்றங்கள் இன்றைக்கு* POCSO *வழக்குகளுக்காகச் செயல்பட்டு வருகின்றன. எங்கெங்கெல்லாம் 100 வழக்குகளுக்குமேல்* POCSO*–வில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவோ அந்த மாவட்டங்களிலே சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. 100 வழக்குகளுக்குக்கீழ் இருந்தால் அங்கே சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்படுவதில்லை. எனவேதான், 100 வழக்குகளுக்குமேல் இருக்கக்கூடிய 16 மாவட்டங்களிலே இன்றைக்குச் சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசைப் பொறுத்தவரைக்கும் விரைந்து விசாரணை என்பதிலே நாம் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு செயல்பட்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதிமன்றத்திலே வாய்தா வாங்குவது போன்றவையெல்லாம் நீதித் துறை சம்பந்தப்பட்டவை. அங்கே காலதாமதம் ஏற்படுவதற்கு நிச்சயமாக அரசு வழக்கறிஞர்கள் எந்தக் காலத்திலும் உறுதுணையாக இருக்கமாட்டார்கள்; துணையும் போகமாட்டார்கள். உரிய காலத்தில் தங்களுக்குரிய மனுக்களை அவர்கள் அங்கே சமர்ப்பித்துவருகின்ற சூழ்நிலையைத்தான் இன்றுவரை நாங்கள் பார்த்துவருகின்றோம். எனவே,* POCSO *வழக்குகளிலே அதிக அக்கறை எடுத்துக்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அரசு இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.*

உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 1–1–2021 முதல் 31–12–2021 வரை 1,820 வழக்குகள் பதியப்பட்டு, அவற்றிலே தீர்க்கப்பட்டுள்ள வழக்குகள் 753. அதைப்போல, 31–12–2022 வரை 1,860 வழக்குகள் பதியப்பட்டு அவற்றிலே தீர்க்கப்பட்டவை 842. எனவே, விரைந்துதான் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். தண்டிக்கப்படக்கூடியவர்கள் 14 சதவிகிதம் என்பது தவறு; இந்த வழக்குகளில், ஏறக்குறைய 50 சதவிகிதத்தையொட்டி நாங்கள் தீர்வு கண்டு கொண்டிருக்கின்றோம். பழைய வழக்குகளுக்கும் சேர்த்துத்தான் இந்த அரசு விரைந்து தீர்வு கண்டு கொண்டிருக்கிறது. POCSO *வழக்குகளைப் பொறுத்தவரையிலும், எந்தக் குற்றவாளியும் தப்பிக்கக் கூடாது*

என்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம், செயல் ஆகும். நிச்சயமாக குற்றவாளிகளைத் தப்பிக்கவிட மாட்டோம்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னப்பா அவர்கள்.

திரு. கு. சின்னப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2007 ஆம் ஆண்டு அரியலூர் மாவட்டம் உருவாக்கப்பட்டது. ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டும் என்பது அம்மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகின்றது. தற்போது, பல்வேறு நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அரியலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் தெரிவித்திருக்கிறோம். அதற்கான திட்ட அறிக்கையும் அரசுக்கு வந்திருக்கிறது. ஆகவே, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை உடனடியாக அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அங்குள்ள வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகளுடன் வந்து, உயர் நீதிமன்றத்திலேயே தாங்கள் இதுபற்றிய கோரிக்கையைத் தந்திருப்பது குறித்து தெரிவித்து, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை வலியுறுத்தியிருக்கின்றார்கள். உயர் நீதிமன்றமும் பரிந்துரை செய்திருக்கிறது. அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எனினும்கூட, தற்போதைய நிதிநிலைமையைப் பொறுத்தவரையில், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு, அதாவது, அனைத்து நீதிமன்றங்களையும் ஒருங்கிணைத்து ஒரே இடத்தில் கட்டுவதற்கு அதிகப்படியான நிதியாதாரங்கள் தேவைப்படுகின்றன. நீதித் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியிலிருந்து, அனைத்துக் கட்டடங்களையும்

2023 ஏப்ரல் 5]

ஒரே இடத்தில் கட்டுவதற்கு, அதாவது மாவட்ட நீதிமன்றம் உள்ளிட்ட மற்ற நீதிமன்றங்களையெல்லாம் ஒரே இடத்தில் கட்டுவதற்கு தற்போதைக்கு சாத்தியம் இல்லை. எனவேதான், நீதிமன்றங்களில் சில வாடகைக் கட்டடங்களிலும், சில சொந்தக் கட்டடங்களிலும், சில அரசுக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை வருங்காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

மும்முனை மின்சாரம்

***11925—திரு. பெரி. செந்தில்நாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விவசாயிகளுடைய நலன் கருதி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையிலும், இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரையிலும் என மொத்தம் 18 மணி நேரம் மும்முனை மின்சாரத்தைத் தடையில்லாமல் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சிவகங்கை தொகுதியிலும் 18 மணி